# மணப்பாறை நகராட்சி

**2019- ஆம் ஆண்டு ஜீன் மாதம் ( 27.06.2019) 27 – ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 27.06.2019 | **பொருள் – 1**<br>நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல் நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.<br>நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி | **தீர்மான எண்.564**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service ) கீழ் முதல்நிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><td>முதுநிலை கணக்கர்</td><td>Senior Accountant</td><td>1</td></tr>
<tr><td>கணக்கு உதவியாளர்</td><td>Accounts Assistant</td><td>1</td></tr>
</table>
மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>இளநிலை உதவியாளர் பணியிடம் இரண்டு மட்டும்.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>பொருள் – 2<br><br>பாராளுமன்ற தேர்தல் - 2019 மணப்பாறை நகராட்சி கோவில்பட்டி ரோடு தொடக்கப்பள்ளியில் மாதிரி வாக்குச்சாவடி அமைத்தல் அக்ரஹாரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அடிப்படை வசதிகள் செய்தல் , 12 எண்ணிக்கை சக்கர நாற்காலிகள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளுக்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதற்கும் , வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.2,15,150/- வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 15-ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்<br><br>ந.க.எண்.1061/2019/இ1</td>
<td>தீர்மான எண்.565<br>பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

27.06.2019

**பொருள் – 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள லாரி TN45AZ 2257-க்கு மராமத்து பணிகள் செய்ய தீர்மான எண்.550 நாள்.06.06.2019-ன் வாயிலாக நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதின்பேரில் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| | ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | 46,000/- |
| | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி. | 48,100/- |
| | சேகர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி , மணப்பாறை | 47,300/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி நிறுவன விலைப்புள்ளியை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம் (1160/2019/**எச்**1)

**தீர்மான எண்.566 அனுமதிக்கப்பட்டது.**

27.06.2019

**பொருள் – 4**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள¦ள லாரி TDY1660-க்கு மராமத்து பணிகள் செய்ய தீர்மான எண்.551 நாள்.06.06.2019ன் வாயிலாக நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதின்பேரில் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி | 48,100/- |
| | சேகர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பொத்தமேட்டுப்பட்டி , மணப்பாறை | 47,300/- |
| | ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | 46,000/- |

வரப்பெற்ற மூன¦று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஆண்டவர்

**தீர்மான எண்.567 அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி நிறுவன விலைப்புள்ளியை ஏற்க கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம் (1161/2019/எச்1) | |
| 27.06.2019 | **பொருள் – 5**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள¦ள லாரி வாகனங்கள் TAX 2402, TN45 AZ 2257 மற்றும் குடிநீர் லாரி TN45 L 7670 ஆகியவற்றிற்கு லாரி பயன்பாடு குறித்து முழுமையாக கணக்கீடு செய்ய GPS Tracking Device, வாங்கி பொறுத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.60,000/- செலவினம் மேற்கொள்ளவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(1298/2019/எச்2) | **தீர்மான எண்.568**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 27.06.2019 | **பொருள் – 6**<br>தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் மாவட்ட அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.4063/இ2/2019 நாள்.03.06.2019-ன்படி, இந்நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் தீ தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு சுமார் 250 அடி ஓஸ் பைப் (Hoze Pipe) வாங்கிடவும் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5000/- செலவினம் மேற்கொள்ளவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(1284/2019/எச்1) | **தீர்மான எண்.569**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 27.06.2019 | **பொருள் – 7**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி திரு.மீனாட்சி சுந்தரம் த/பெ.வெங்கடாசலம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD).No.13115/2019-க்கு திரு.ஜே.லாரன்ஸ் வழக்கறிஞர் ஆஜரானதற்கு வழக்கு கட்டணம் ரூ.7500/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி | **தீர்மான எண்.570**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(1359/2019/எப்1) | |
| 27.06.2019 | **பொருள் – 8**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி திரு.வரதராஜன் த/பெ.ராஜகோபால் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD).No.8034/2019-க்கு நகராட்சி சார்பாக திரு.ஜே.லாரன்ஸ் வழக்கறிஞர் ஆஜரானதற்கு வழக்கு கட்டணம் ரூ.7500/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(988/2019/எப்1) | **தீர்மான எண். 571 அனுமதிக்கப்பட்டது.** |
| 27.06.2019 | **பொருள் – 9**<br>திரு.தியாகராஜன், த/பெ.(லேட்)வெள்ளைச்சாமி தேவர் என்பவரால் மணப்பாறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு I.A No.02/2019, O.S.No.64/2019 நாள்.05.03.2019-ல் சொத்துவரி தொடர்பாக "நகராட்சி ஆணையர் " அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக, இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.க.பழனிக்குமார் அவர்கள¦ ஆஜராவதற்கும் மற்றும் அதற்கான வழக்கு செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.572 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 27.06.2019 | **பொருள் – 10**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறைகள் ந .க.எண்.2288/2019/P3 நாள்.25.03.2019 ன்படி, மணப்பாறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி, தயார் செய்யப்பட்ட " திடக்கழிவு மேலாண்மை கொள்கையினை " மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ .44,000/- செலவினம் மேற்கொள்ளவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(1301/19/எச்1) | **தீர்மான எண்.573 அனுமதிக்கப்பட்டது.** |
| 27.06.2019 | **பொருள் – 11**<br>மணப்பாறை நகராட்சி குடிநீர் விநியோகத்தில் கேஸ்குளோரினேசன் உபயோகப்படுத்தப்படுகிறது. வார்டு எண்.5 பொத்தமேட்டுப்பட்டியில் நிறுவப்பட்டுள்ள கேஸ்குளோரினேசன் சென்டருக்கு தேவையான கேஸ் சிலிண்டர்கள் R.K Enterprises, Kerala விலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. மேற்படி கேஸ்குளோரினேசன் சென்டருக்கு வருடத்திற்கு தோராயமாக 15 கேஸ்குளோரினேசன் சிலிண்டர் தேவைப்படுகிறது. ஒரு சிலிண்டருக்கு ரூ.7434/- வீதம் 15 எண்ணிக்கைக்கு ரூ.1,15,000/- செலவினம் ஏற்படுகிறது. மார்ச் 2021 வரை உள்ள காலத்திற்கு கேஸ்குளோரினேசன் சிலிண்டர்கள் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரூ.2,30,000/- அய் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம், தேவைக்கேற்ப சிலிண்டர்களை R.K Enterprises, நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.574 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 27.06.2019 | **பொருள் – 12**<br>இந்நகராட்சி குடிநீர் லாரி வாகனம் எண். TN.45 L 7670–க்கு 2019–20 ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வானத்தில் ஏற்பட்டுள்ள கீழ்க்கண்ட பழுதுகளை ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்ல் சரிசெய்ய அனுமதிக்கும் உத்தேச செலவினம் ரூ.67000/- குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும்<br><br>1. கிளர்ச் பிளேட் கவர் அசம்பிள் மேல் கிட்டு, கீழ் கிட்டு புதியது மாற்றுதல்<br>2. 3 வீல் பேரிங்மாற்றி கிரிஸ் பேக்கிங் செய்தல்<br>3.டேங்க் மேல்புறம் ஓட்டை சரிசெய்து பின்புறம் மர்க்கார்டு புதியது மாற்றி சிறு வேலைகள் செய்தல்<br>4. 2ஸ்டார் புதியது மாற்றி சர்வீஸ் செய்தல்<br>5.ஸ்பிரிங் பட்டை டெபர் அடித்து புஸ் மாற்றுதல்<br>6.கீர் ஆயில் கிரவுன்ஆயில் புதியது மாற்றி சர்வீஸ் செய்தல்<br>7.எலக்ட்ரிக் வேலைகள் சரி பார்த்தல்<br>8.வண்டியின் உட்புறம் வெளிபுறம் பெயின்ட் அடித்து பெயர் எழுத வேண்டும்<br>9.சைலென்சர் புதியது மாற்றுதல்<br>மேற்கண்ட பணிகள் அரசு பணிமணையில் சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.67000/- (அறுபத்து ஏழாயிரம்) பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம், குடிநீர் பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.575 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 27.06.2019 | **பொருள் – 13**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அனைத்து கடைகளும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மறு பொது ஏலம் கோரப்பட வேண்டும் என திரு.நா.முருகன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD).No.10333/2017-க்கு இந்நகரராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு .ஜே.லாரன்ஸ் அவர்கள் ஆஜரானதற்கு முன் அனுமதி பெற வழக்கு கட்டணமாக ரூ .12500/- ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம் முன் அனுமதி பெற்று செலவு மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்<br><br>(ந.க.எண்.744/2017/அ2) | **தீர்மான எண்.576**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**